# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 ஒளிவர் ஆண்டு 2037 ஆவணி 16 வெள்ளிக்கிழமை (01.09.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 277


# இலங்கையில் தனது நடவடிக்கைகளை நிறுத்தப் போவதாக ஐ.நா. எச்சரிக்கை!

## தொண்டுப் பணியாளர் படுகொலைகளுக்கு பொறுப்புக் கூறாவிடில் அதுதான் ஒரேவழியாம்

கொழும்பு, செப்ரெம்பர் 01

**சர்வதேச தொண்டு நிறுவனத்தின் 17 ஊழியர்கள் மூதூரில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டதன் பின்னணியில் இருந்த பாதுகாப்புப் படையினரை இனங்கண்டு அவர்களுக்கு எதிரானடவடிக்கையை அரசு எடுக்க முன்வரவேண்டும். தவறின் இலங்கையில் ஐ.நாவின் நிவாரவப் பணிகளை இடைநிறுத்தி வைக்கப்பட நேரிடும் என்று ஐக்கிய நாடுகள் சபை (ஐ.நா.)எச்சரித்துள்ளது.**

இந்தப் கொலைகளுக்குப் பாதுகாப்புப் படையினகாரணம் என்று யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு குற்றஞ்சாட்டி அறிக்கை விடுத்த அறைய தினம் இரவோடு இரவாக ஐ.நா. இந்த எச்சரிக்கையை இலங்கைக்கு விடுத்திருக்கிறது.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் இந்தக் குற்றச்சாட்டை இலங்கை மறுத்து நிராகரித்திருக்கிறது. புலிகளுக்குச் சாதகமான முறையில் கண்காணிப்புக் குழு தனது அறிக்கையைப் பாரபட்சமாக விடுத்திருக்கிறது

(04ஆம் பக்கம் பார்க்க)

## பெற்றோல்,டீசல் விலை நேற்று முதல் அதிகரிப்பு

கொழும்பு, செப். 1

இந்திய எரிபொருள் கூட்டுத்தாபனம் இலங்கையில் டீசல், பெற்றோல் ஆகியவற்றின் விலைகளை நேற்று நள்ளிரவு முதல் 7 ரூபாவால் அதிகரித்திருக்கின்றது.

இதன்படி நாடு முழுவதிலும் இந்திய எண்ணெய்க் கம்பனிக்குச் சொந்தமான 170

(04ஆம் பக்கம் பார்க்க)

## மின்சாரக் கட்டணமும் உயர்வு

கொழும்பு,செப்.1

மின்சாரக் கட்டணங்களும் இன்றுமுதல் அதிகரிக்கப்பட்டுள்ளன.

உலகச் சந்தையில் எரிபொருள்களுக்கு ஏற்பட்டுள்ள விலை அதிகரிப்பே இதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

(04ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் பிளயர் - ராஜபக்ஷ நேற்றுச் சந்தித்துப் பேச்சு

லண்டன், செப்.1

பிரிட்டனுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அந்நாட்டின் பிரதமர் ரொனி பிளயரை நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இலங்கையின் தற்போதைய நிலைவரம் குறித்து தலைவர்களும் பேசினர் என்று பிரிட்டிஷ் பிரதமரின் அலுவலகப் பெண் பேச்சாளர் ஏ. எப். பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

வடமேற்கு லண்டனில் அமைந்துள்ள பிரதமர் பிளயரின் நாட்டுப்புற வாசஸ்தலத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது என்று அறிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்திப்பின்போது பொதுவான

(04ஆம் பக்கம் பார்க்க)

## மஹிந்தவின் வருகையை எதிர்த்து லண்டனில் தமிழர்கள் ஆர்ப்பாட்டம்!

லண்டன், செப். 1

லண்டனுக்கு வருகை தந்திருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிர்ப்புத்தெரிவித்து அங்கு வசிக்கும் ஈழத் தமிழர்கள் நேற்று பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் ஆயிரம் பேர்வரை - பெண்கள், சிறு

(04ஆம் பக்கம் பார்க்க)




## செங்கலடியில் கைக்குண்டு வீச்சு இரு கான்ஸ்டபிள்கள் காயம்

கொழும்பு, செப்.1

செங்கலடியிலுள்ள பொலிஸ் சோதனைச் சாவடிமீது நேற்றுக்காலை கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனால், அங்கு கடமையிலிருந்த இரு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் காயமுற்றனர்.

சோதனைச் சாவடிமீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்திய நபரைப் பொலிஸார் சுட்டுப்பிடித்தனர் என தேசிய பாதுகாப்புத் தகவல் மையம் தெரிவித்தது.

(த)

## குடாநாட்டு மக்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்குகின்றனர் - யாழ். ஆயர்

யாழ்ப்பாணம்,செப்.1



குடாநாட்டு மக்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ளனர் என யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் கவலை தெரிவித்துள்ளார்.

நேற்றிரவு அவர் விடுத்த அறிக்கை ஒன்றில் இப்படிக் கூறியுள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 11ஆம் திகதி முதல் ஏ-9 பாதை மூடப்பட்டதால் கையிருப்பில் இருந்த உணவுப் பொருள்கள் முடிவடைந்த நிலையில் ஒரு கப்பல் மட்டும் சிறு அளவு உணவுப் பொருள்களுடன் யாழ்.வந்து சேர்ந்துள்ளது. இவ்வுணவுப் பொருள்கள் ஒரு வாரத்திற்கும் போதுமானதல்ல. வாரம் ஒன்றிற்கு 5000 மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள்

(04ஆம் பக்கம் பார்க்க)

## இருபாலையில் இளைஞன் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம்,செப்.1

இருபாலை - கோண்டாவில் வீதியில் இராசபாதைச் சந்திக்கு சமீபமாக நேற்று பிற்பகல் 2 மணியளவில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

வீதியில் வந்த பிரஸ்தாப இளைஞரை மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதவர்கள் கலைத்து சென்றனர் எனவும் -

அந்த இளைஞன் அருகில் உள்ள வீடு ஒன்றுக்குள் ஓடியதாகவும் - அங்கு வைத்து

(04ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் சில இடங்களில் விமானத்தாக்குதல், ஷெல் வீச்சு!

வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் மீது விமானத் தாக்குதல் மற்றும் ஆட்லறி ஷெல் வீச்சு இடம்பெற்றிருக்கின்றன.

கிளிநொச்சி நகருக்கு அப்பால் இயக்கச்சி மற்றும் அதனை அண்டிய பகுதிகள் மீது நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை கிபிர் விமானங்கள் 8 தடவைகள் தாக்குதல் நடத்தின. நேற்றுக்காலை 9.45 மணியளவில் திடீரென வளி வான்பரப்புக்குள் நுழைந்த கிபிர் விமானங்கள் கிளிநொச்சி நகரை அண்டிய பகுதிகளில் மூன்று குண்டுகளை வீசின.

இதேவேளை, புலோப்பளை, பெரியபளை, அல்லிப்பளை, இத்தாவில், தர்மக்கேணி ஆகிய பகுதிகளிலுள்ள குடியிருப்புகள் நோக்கி படையினர் வரணி இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினமும் நேற்றும் தொடர்ச்சியான ஆட்லறி ஷெல் தாக்குதலை நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது. இதில் பல வீடுகள் சேதமடைந்தன.

(த)

## கெப்பிட்டிக்கொல்லாவ படுகொலைகள் குறித்த கண்காணிப்புக் குழுவின் குற்றச்சாட்டை விடுதலைப் புலிகள் அடியோடு நிராகரிப்பு

கெப்பிட்டிக்கொல்லாவ சம்பவம் தொடர்பாக இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்திருக்கும் குற்றச்சாட்டை தமிழீழ விடுதலைப் புலிகள் நிராகரித்துள்ளனர்.

இது குறித்து பி.பி.சி.தமிழோசைக்கு விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் நேற்றுமுன்தினம் புதன்கிழமை அளித்த நேர்காணலில்:-

இந்தக் குற்றச்சாட்டு உண்மையிலேயே தகுந்த ஆதாரங்களின் அடிப்படையில் பெறப்பட்டதாகத் தெரியவில்லை.

(04ஆம் பக்கம் பார்க்க)

## நெல்லியடியில் கிளைமோர் இராணுவச் சிப்பாய் காயம்

### தேடுதல்; ஆயுதங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், செப்.1

நெல்லியடி முடக்காட்டுப் பகுதியில் நேற்று பகல் 11.30 மணியளவில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதல் சம்பவத்தில் படைச்சிப்பாய் ஒருவர் காயமடைந்துள்ளார்.

முடக்காட்டுப் பகுதியில் வீதி ரோந்தில் ஈடுபட்ட படையினரை இலக்கு வைத்து இந்

(04ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சிக்கான பஸ்சேவை நேற்று ஆரம்பமானது

யாழ்ப்பாணம்,செப்.1

கடந்த மாதம் 11ஆம் திகதி முதல் தடைப்பட்டிருந்த தென்மராட்சிப் பிரதேசத்துக்கான போக்குவரத்து சபையின் பஸ் சேவை நேற்று ஆரம்பமானது.

தென்மராட்சியில் ஊரடங்கு நீக்கப்பட்டதன் பின்னர், யாழ்ப்பாணத்தில் இருந்து கொடிகாமம் வரை மூன்று சேவைகள் நேற்று நடத்தப்பட்டன என்றும் -

கடைசி பஸ் கைதடியில் இரவு தரித்து நின்று ஊரடங்கு நீக்கப்பட்டவுடன் இன்று கொடிகாமம் வரை சேவையில் ஈடுபடுத்தப்படும் என்றும் - போக்குவரத்துச் சபை வடபிராந்திய முகாமை யாளர் எஸ்.கணேசபிள்ளை உதயனுக்குத் தெரிவித்தார்.

சகல பாதைகளிலும் பாடசாலை பஸ் சேவை நடத்தப்படுவதாகவும் -

ஆனால் குறைந்தளவு எண்ணிக்கையான மாணவர்களே பயணம் செய்வதாகவும்- அவர் மேலும் தெரிவித்தார்.

(அ-)

**மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓராண்டு திருமண நிறைவுநாள் வாழ்த்து




திருநெல்வேலியை
வசிப்பிடமாகக் கொண்ட
**ஜெய்குமார் - மேகலா**
தம்பதியரின் ஓராண்டு
திருமண நிறைவு
நாளான
இன்று (01.09.2006)
வெள்ளிக்கிழமை
எங்கள் அன்புச்
செல்வங்கள்
நாகபூசணியின்
நல்லருளைப் பெற்று
நலமுடன் பல்லாண்டு
வாழ்கவென வாழ்த்தும்:
அன்பு உள்ளங்களான
அப்பா, அம்மா,
அத்தான், அக்கா,
மைத்துனர், அண்ணா,
தம்பிமார்கள்,
தங்கைகள்.

நி.முகவரி: மண்டைதீவு(08).
த.முகவரி: திருநெல்வேலி. (53378)
**திரு.நா.சிவகுருநாதன் குடும்பம்,**

## எனது கணவரை வைத்திருப்பவர்கள் மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யுங்கள்



20-08-2006இல் அல்லைப்பிட்டி பங்குத்தந்தையுடன் எனது கணவர் வென்செலோஸ் வின்சன் விமலதாஸ் *(பிலிப்பு நேரியார் கோயில், சங்கிலிதாம்)* அல்லைப்பிட்டிப் பகுதியில் மர்மமான முறையில் காணாமல் போயுள்ளார். 11 நாள்களாக நான் காணாமற்போன எனது கணவரைத் தேடியும், பல இடங்களில் முறையீடு செய்தும் இதுவரை எது வித பதிலும் கிடைக்கவில்லை. இவரைப் பிடித்து வைத்திருக்கும் எவராக இருந்தாலும் மனிதாபிமான அடிப்படையில் மனமிரங்கி விடுதலை செய்யுங்கள். எனது பரிதாப நிலையை மனதிற் கொண்டு ஐந்து பிள்ளைகளின் தந்தையாகிய எனது கணவர் வென்செலோஸ் வின்சன் விமலதாஸ் என்பவரையும் அல்லைப்பிட்டியின் எமது பங்குத்தந்தை ஜிம்புறோன் அடிகளாரையும் மனமிரங்கி கருணையுடன் எம்மிடம் ஒப்படைக்குமாறு கைகூப்பி மன்றாட்டமாகக் கேட்டு நிற்கின்றேன்.

இல.25, சேமக்காலை வீதி,
நாவாந்துறை. (53441) **மனைவி.**

சொல்லில் அடங்காத சோகத்தில்
எங்கள் உள்ளத்தில் நிறைந்த அன்புத் தெய்வத்தின்

## 3ஆம் ஆண்டு மலர் தூவல்

ஜெகதீசனாய்
03 * 04 * 1959



ஜெகதீபமாய்
03 * 09 * 2003

## வைத்திலிங்கம் ஜெகதீஸ்வரன்

திதி: பூர்வபக்க அட்டமி

காலச் சக்கரங்கள் சுழன்றோடி கொடிய வருடங்கள் மூன்றானதோ?
ஒரு கூட்டுப் பறவைகள் போல் ஒற்றுமையாக வாழ்ந்தோம் அப்பா!
எங்கள் அழகிய கூட்டிற்குள் நுழைந்த காலன் தான் யாரப்பா?
முல்லை மண் பெற்றெடுத்த மைந்தா, உங்கள் பாசமழலைகள்
- நாம் தேற்றுவாரின்றி வாடிநிற்கிறோம்.
விண்ணகத்தில் நீங்கள் தெய்வமப்பா, வீட்டிலே தெய்வம் அம்மா
அப்பா! நீங்கள் எங்களிடம் மீண்டும் வருவதென்பது பொய்க்கனவு தானப்பா
வீட்டிலே நன்மைகள் நடக்கும்போது எம்மருகே நீங்கள் இல்லையப்பா
நிச்சயம் எங்கள் அப்பா வானத்தில் இருந்து நேசமுற வாழ்த்துவீர்கள்.
உங்கள் ஆத்மா சாந்திபெற தினமும் உங்கள் நிழற்படம்
முன்நின்று கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

(53433)

எங்கள் உயிர் உள்ளவரை எங்கள் நெஞ்சத்தில் வைத்து
பூஜித்து நிற்கும் உங்கள்:
**இணைபிரியா மனைவி, பாசமைந்தர்கள்.**

374, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்

திருமதி
## வீரகத்திப்பிள்ளை தங்கம்மா

நயினாதீவு, 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி வீரகத்திப்பிள்ளை தங்கம்மா அவர்கள் 31.08.2006 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரகத்திப்பிள்ளையின் அன்பு மனைவியும் நடராசா(வேப்பங்குளம் - வவுனியா) காலஞ்சென்ற கமலாம்பிகை, காலஞ்சென்ற மயில்வாகனம், மனோன்மணி (கனடா), கனகரட்ணம், மகேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயும் கமலவதி, மகாலிங்கம் (கனடா), சிவகாமசுந்தரி (சுவிஸ்), காலஞ்சென்ற முத்தையா, மகேஸ்வரி, காலஞ்சென்ற தில்லைநாதன் (நாதன் கபே, கொழும்பு) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.09.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நயினாதீவு சல்லிபரவை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*7ஆம் வட்டாரம்,*
*நயினாதீவு.* (53440)
*தகவல்:* **வீ.கனகரெட்ணம் (மகன்).**

---

மாவை கொல்லங்கலட்டி
**பிள்ளையார் கோயில் சிவன் கோயில்**
## சித்திரத்தேர் ஆரம்ப விழா

*நாளை சனிக்கிழமை மல்லாகம் பழம் பிள்ளையார் கோயிலில் நண்பகல் 12 மணிக்கு தெய்வேந்தி சுப வேளையில் சித்திரத்தேர் ஆரம்பவிழா நிகழும். நீர்வேலி வடக்கு காமாட்சி சிற்பாலய ஸ்தபதி திரு. செ. வில்வலிங்கம் ஆசாரி அவர்கள் நிர்மாணிக்க உள்ளார்.*

*புனருத்தாரண சபை*

## பொருளியற் கல்லூரி

*யாழ்ப்பாணம் - இணுவில்*

(இரு இடங்களிலும்)
சனி - ஞாயிறு
**A/L 2007, 2008**
**கலை, வர்த்தகப் பிரிவுகள்**
**ஆரம்பம்**
02.09.2006 (சனி)
**குறிப்பு:** ஊரடங்கு நேரம் நீக்கப்பட்டு ஒரு மணித்தியாலத்தின் பின் ஆரம்பமாகும்.

## முக்கிய கலந்துரையாடல்

**2007, 2008** கணித, விஞ்ஞான மாணவர்களுக்கானது
இடம் :- NEW SCIENCE COLLEGE
காலம் :- 01-09-2006 வெள்ளி 2.30 (P.M.) இன்று
விடயம் :- பொருத்தமான நேரத்தை தெரிதல்
பாடம் :- பௌதீகவியல்
ஆசிரியர் :- கருணாநிதி
* மாணவர்கள் தவறாது கலந்துகொள்ளவும்

## INSTITUTE OF INFORMATION TECHNOLOGY

R.D.S. Building, K.K.S. Road Mallakam
T.P.: 021 4591920

### அறிவித்தல்

எமது நிறுவனத்தில் கணனிக்கற்கை நெறியினை மேற்கொள்ளும் அனைத்து மாணவர்களுக்குமான விரிவுரைகள் மற்றும் செய்முறைப்பயிற்சிகளும் 01.09.2006 இருந்து நடைபெறும்.

மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

**-நிர்வாகம்.**

## NIIT

347-2/1, Kasthuriyar Road,
Jaffna.
021 222 7250

**அனைத்து பிரிவுகளுக்குமான வகுப்புகள் திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகின்றன.**

குறிப்பு: ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்ட ஒரு மணித்தியாலத்தின் பின் வகுப்புகள் ஆரம்பமாகும். (#50945)

## எலைற் கல்வி நிறுவனம்

**147, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்**

தரம் 3 முதல் O/L வரை அனைத்து வகுப்புக்களும் மீண்டும் ஆரம்பமாகின்றன.
ஆரம்பம்: 02.09.2006 சனி
(ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட ஒரு மணித்தியாலத்தின் பின்.) **நிர்வாகி.**

## வீட்டுப் பாவனைப் பொருள்கள் விற்பனைக்கு உண்டு

குளிர்சாதனப் பெட்டி உட்பட வீட்டுப் பாவனைப் பொருள்கள் விற்பனைக்கு உண்டு. விரும்புவோர் 5 நாள்களுக்குள் தொடர்புகொள்ளவும்.

திரு.தர்மலிங்கம்,
17/3, கோணாவளை வீதி, கொக்குவில் கிழக்கு. (53435)

## Alliance Francaise de Jaffna

83, Palaly Road,
Kantharmadam, Jaffna,
SriLanka
Phone : 021 2228093
Email : alliancejaffna@yahoo.com

### அறிவித்தல்

பதிவுகளை மேற்கொண்ட அனைத்து மாணவர்களுக்குமான பிரெஞ்சு மொழி வகுப்புகள் வழமைபோல் 02.09.2006 இல் இருந்து நடைபெறும்.

(53424) **- இயக்குநர்.**

---

மனோகரா யாழ்ப்பாணம்
அரண்
மீண்டும்
டிஸ்யூம் புகழ் ஜீவகாசிகா, மோகன்லா...
பிரகாஷ்ராஜும் பலர் நடித்த
காட்சிநேரம்:10.32.30 மட்டும்.

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
**Dr.செல்லையா வேலாயுதபிள்ளை**
திதி: ...யாதசி
பிறப்பு 24-09-1942 இறப்பு 01-09-2005

தையிட்டிப்புலம் ...பிறப்பிடமாகவும் ... சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொ... லண்டனிலமான Dr.வேலாயுதபிள்ளை அவர்களின் ஓராண்டு நினைவஞ்சலி.

பதிவாளர்வளவு,
சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.
**குடும்பத்தினரும் சோதரரும்.** (53354)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே ந...

## 16ஆம் வருட இதய அஞ்சலி



திரும...
**இராஜேஸ்வரிதிரவேலு**
திதி: நவமி 01.2006
தோற்றம் 07.02.1947 மறைவு ...08.1990

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து மதை - இன்று
பதினாறு ஆண்டுகள் சென்றுவிட்டதோ
மறக்கமுடியுமா உம்மை எங்களால்....?

103/4 முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (53360)
**குடும்பத்தினர்.**

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
09 - 12 - 1928



...ண்டவன் ...டியில்
23 - 08 - ...004

அமரர்
## செல்லையா தியாகராசா

(முன்னாள் மதுவரித்திணைக்கள உதவி ஆணையர்)

**எங்கள் குடும்ப விளக்கு**
**அணைந்தாலும் எங்கள்**
**நெஞ்சங்களைவிட்டு அகலாது**
**என்றும் பிரகாசித்துக் கொண்டு**
**இருக்கும் எங்கள் தலைவனே**

116, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (53437)
**- குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

## சின்னத்துரை மகாலிங்கம்



சுன்னாகம், முத்துக்கிருஸ்ணர் ஒழுங்கையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை மகாலிங்கம் (முன்னாள் இலங்கை போக்குவரத்துச் சபை காப்பாளர்) நேற்று (31.08.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - இராசம்மா தம்பதியரின் சிரேஷ்டபுத்திரரும் காலஞ்சென்ற மங்கயற்கரசி (கூட்டுறவுப் பரிசோதகர்) அவர்களின் அன்புக் கணவரும் சத்தியவாணி (ஆசிரியை - யாழ். வடமராட்சி மத்திய கல்லூரி) தர்சினி (பவி)(ஆசிரியை - கிளிநொச்சி மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்ரீதரன் (ஆசிரியர் - நாரந்தனை கே. மகா வித்தியாலயம்) அவர்களின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.09.2006) வெள்ளிக்கிழமை மு.ப 10 மணிக்கு சுன்னாகம் கொத்தியாலடி மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முத்துக் கிருஸ்ணர் வீதி,*
*சுன்னாகம்.* (53503)
*தகவல்:* **மகள், மருமகன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# சர்வதேச விசாரணைக்கு அனுமதிக்க அரசு தயாரா?

மூதூரில் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனம் ஒன்றின் பணியாளர்கள் 17 பேர் படுகொலை செய்யப்பட்டமைக்கு அரச படைகளே பொறுப்பு என்ற சாரப்பட, நேற்றுடன் தமது பணியை முடித்துக்கொண்டு, தமது தாயகம் திரும்பும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் உல்ப் ஹென்றிக் ஸன் வழங்கிய தீர்பபு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருக் கின்றது.

அரசுத் தரப்போ கண்காணிப்புக் குழுவின் இத்தீர்ப்பை அடிப்படை ஏதுமற்ற - ஆதாரங்கள் எதுவுமற்ற - கற்பனையில் எழுந்த - முடிவு என்று கடுமையாகச் சாடியிருக்கின்றது.

அரசின் பாதுகாப்புத்துறைப் பேச்சாளரும், அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல கண்காணிப்புக் குழுவின் இந்த முடிவு தொடர்பாகத் தெரிவித்த கருத்துக்களில் இரண்டு அம்சங்கள் கவனிக்கத்தக்கவை.

ஒன்று - இந்தப் பதினேழு தொண்டுப் பணியாளர்களும் படுகொலை செய்யப்பட்ட நேரம் தொடர்பானது.

மற்றது - அந்த விடயத்தை விசாரித்து முடிவு கூறும் நியாயாதிக்கம் பற்றியது.

கடந்த ஒகஸ்ட் 2 ஆம் திகதி காலை முதல் ஒகஸ்ட் 5 ஆம் திகதிவரை மூதூர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது என்றுகூறும் அமைச்சர் ரம்புக்வெல, மேற்படி 17 பேரின் படுகொலைகள் தொர்பான மருத்துவ அறிக்கையில் அந்தப் படுகொலைகள் ஒகஸ்ட் 3 ஆம் திகதி பின்னிரவில் அல்லது ஒகஸ்ட 4 ஆம் திகதி நடைபெற்றிருக்க வேண்டும் எனக் கூறுப்பட்டிருப்பதையும் சுட்டிக் காட்டுகின்றார். ஆகவே, இந்தப் படுகொலைகளுக்குப் புலிகளே காரணம் என்பது அவரது வாதம்

ஆனால், அவரது இந்தக் கருத்துக்கு அவரது வாசகத்திலேயே நேற்றுமுன்தினம் பதில் பெற்றுத் தந்திருக்கின்றது பி.பி.ஸியின் சிங்கள சேவையான 'சந்தேசிய'.

அமைச்சர் ரம்புக்வெலவின் இந்தக் கருத்தை அப்படியே ஒலிபரப்பிய சந்தேசிய' அதை அடுத்து ஒகஸ்ட் 4 ஆம் திகதியன்று மாலையில் அதே 'சந்தேசிய'வுக்கு அமைச்சர் ரம்புக்வெல முன்னர் அளித்த பேட்டியை மீளவும்அவருக்கு நினைப்பூட்டியது. மூதூர் புலிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதை ஒகஸ்ட் 4 ஆம் திகதியன்று வழங்கிய பேட்டியில் அமைச்சர் ரம்புக்வெல அடியோடு மறுத்திருந்தார். மூதூர், அரச படைகளின் கட்டுப்பாட்டிலேயே இருப்பதாக அன்றைய பேட்டியில் அவர் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தார்.

அதை, அவருக்கு நினைவுபடுத்திய பின்னர் அத்திகதியில் மூதூர் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்ததுஎன்று இப்போது எப்படிக் கூறமுடியும் என்று அமைச்சர் ரம்புக்வெலவிடமே வினாவெழுப்பி அவரை மலைக்க வைத்திருக்கிறது 'சந்தேசிய'.

அடுத்து, இந்தப் படுகொலைச் சம்பவம் தொடர்பான விடயம் நீதிமன்ற விசாரணையில் இருப்பதால் இது முற்றுமுழுதாக நீதிமன்றத்துக்கு உட்பட்ட விடயம் என்று குறிப்பிட்டிருக்கும் அமைச்சர் ரம்புக்வெல, அதனால் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு இத்தகைய முடிவை அளிக்கும் உரிமை ஏதும் கிடையாது என்றும் கூறியிருக்கின்றார்.

அவரது இந்த வாதத்தையும், அதனை முதன்மைப் படுத்தி அரச ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருப்பதையும் பார்க்கும்போது அழுவதா, சிரிப்பதா என்றே தெரியவில்லை.

யுத்த முனைப் பிரதேசத்தில் தொண்டர் நிறுவன ஊழியர்கள் 17 பேர் படுகொலை செய்யப்பட்ட விவகாரம் குறித்து விசாரித்துத்தனது முடிவை வழங்குவதற்கு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு உரிமை ஏதும் கிடையாது. அது நீதிமன்ற விவகாரம் என்றால் -

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் - இலங்கை அரசின் நீதிமன்ற நியாயாதிக்கம் உள்ள பிரதேசங்கள் என அரசுத் தரப்புக் கருதும் இடங்களில், இடம்பெறும் சம்பவங்கள் நீதிமன்ற விசாரணைக்கு உட்பட்டவை என்ற காரணத்தால் -

கொழும்பு இராணுவத் தலைமையக வாசலில், இராணுவத் தளபதி மீது இலக்குவைத்து நடத்தப்பட்ட - பலரின் உயிரிழப்புக்குக் காரணமான - தற்கொலைக் குண்டுத் தாக்குதல் உட்பட - எந்த வன்முறைச் சம்பவம் குறித்தும் தனது முடிவை அறிவிப்பதற்கு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு உரிமை இல்லாமல் போய்விடும்.

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட யுத்த நிறுத்த உடன்பாட்டின் கீழ், இரு தரப்புகளினாலும் எழுத்து மூலம் வழங்கப்பட்ட உறுதியுரைக்கு அமையவே யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு செயற்படுகின்றது.

இவ்வாறு தீர்ப்பு வழங்கும் உரிமை அதன் அடிப்படையிலேயே இரு தரப்பினராலும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

யுத்த நிறுத்த மீறல் குற்றச்சாட்டுத் தொடர்பாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு வழங்கும் முடிவை - தீர்ப்பை - தவறு என்று விமர்சிப்பது வேறு. அத்தகைய தீர்ப்பைக் கூறும் அதிகாரம் - அவ்வாறு முடிவு கூறும் விடயம் - யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு உரியதேயல்ல என்று விவாதிப்பது வேறு.

இரண்டாவது வகை விமர்சனத்தில் இப்போது திடீரென அரசுத் தரப்பு ஈடுபடுவது நகைப்புக்குரியது.

"தொண்டுப் பணியாளர்கள் - தமிழர்கள் - 17 பேர் படுகொலை செய்யப்பட்டமை சம்பந்தமான விடயத்தில் அரசும் சம்பந்தப்பட்டிருப்பதால் ,அது தொடர்பான அரச விசாரணைகளை நம்புவதில் எமக்குப் பிரச்சினைகள் உள்ளன. ஜனநாயக - பொறுப்புச் சொல்லக் கூடிய - ஓர் அரசு என்றால், அது, இத்தகைய சம்பவங்களை சர்வதேச ஆணைக் குழு ஒன்று விசாரிப்பதற்கு ஆதரவு தர வேண் டும்." - என்று யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் கூறியிருக்கின்றார்.

அத்தகைய ஆணைக் குழுவே உண்மையை வெளிப் படுத்தும்.

'அரச பயங்கரவாதம்' புரியாத தூய அரசு எனத் தன்னைப் பிரபலாபித்துக் கொள்ளும் இந்த அரசு 'அதற்குத் தயாரா? இதனைத் தெளிவுபடுத்தினால் சர்வதேச சமூகம் இவ்விடயத்தில் ஒரு முடிவை எடுக்க உதவும்.

# பலவந்தமாகக் காணாமற்போனோர் எண்ணிக்கை இலங்கையிலேயே அதிகம்

## சர்வதேச மன்னிப்புச் சபை அறிவிப்பு

கொழும்பு,செப்.1

பலவந்தமாகக் காணாமற்போகச் செய்யப்பட்டு ஒருமுடிவும் காணப்படாமல் இருப்பவர்களின் மிகப்பெரிய எண்ணிக்கை இலங்கையிலேயே காணப்படுகின்றது - என்று சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

பலவந்தமாகக் காணாமற்போகச் செய்யப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான குடும்பங்களின் நிலைமை என்னவென்றே தெரியாமல் இருந்து வருகின்றது. அவர்களின் உறவினர்களின் விதியும் என்னவென்று தெரியாமலிருக்கிறது.

தென்னாசியாவின் பயங்கரவாதத்தின் மீதான போர் தொடர்பாக விடுத்துள்ள ஆய்வறிக்கையில் சர்வதேச மன்னிப்புச் சபை பாகிஸ்தான், நேபாளம், இலங்கை போன்ற நாடுகளில் பலவந்தமாகக் காணாமற்போகச் செய்யப்பட்டவர்கள் பற்றி இவ்வாறு தெரிவித்துள்ளது.

காணாமற்போனோர் சர்வதேச தினம் ஒகஸ்ட் 30ஆம் திகதியாகும். அதனையொட்டி சர்வதேச மன்னிப்புச் சபை அன்றையதினம் ஆய்வு அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தென்னாசிய நாடுகளில் பலாத்காரமாகக் காணாமற் போவதென்பது தொடர்ந்து இடம்பெற்றுவரும் நிகழ்வாகும்.

இலங்கையில் கடந்த மே மாதம் 6ஆம் திகதி இந்துக் கோயில் ஒன்றை அலங்கரிக்கச் சென்ற எட்டு தமிழ் ஆண்கள் வீடு திரும்பவில்லை. அடுத்த நாள் காலையில் அவர்களின் குடும்பத்தவர்கள் முறைப்பாடு செய்திருந்தார்கள். அன்று இரவு இலங்கை இராணுவத்தினரைத் தாங்கள் அக்கோயிலில் கண்டதாகவும் தெரிவித்திருந்தார்கள். அந்த இளைஞர்களுக்கு என்ன நேர்ந்ததென்பது இன்னமும் மர்மமாகவே இருக்கிறது.

சர்வதேச மன்னிப்புச்சபை தனது அறிக்கையில் இலங்கை பற்றிய குறிப்பில் மேலும் பின்வருமாறு தெரிவித்துள்ளது:-

2005ஆம் ஆண்டு புதிய அவசர காலச் சட்ட விதிகள் அமுலாக்கத்திற்கு வந்த பிறகு அரச தரப்பினரால் பல வந்தமாகக் காணாமற்போகச் செய்யப்படும் செயற்பாடுகள் மீளவும் தலைகாட்டத் தொடங்கியிருப்பதாக அஞ்சப்படுகின்றது. இந்தச் சட்டம் பாதுகாப்புப் படைகளுக்கு விரிவான அதிகாரங்களை வழங்கியுள்ளது. கடந்த ஆண்டு மாத்திரம் இலங்கையின் வடபகுதியில் மனித உரிமை ஆணைக் குழுவிடம் பலவந்தமாகக் காணாமற் போகச் செய்யப்பட்டவர்கள் தொடர்பான 62 முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. மர்மமான சூழ்நிலைகளில் காணாமற்போனவர்கள் தொடர்பான மேலும் 183 முறைப்பாடுகள் பற்றியும் மனித உரிமை ஆணைக்குழு விசாரித்து வருகின்றது. (ப)

# குடாநாட்டில் வெயில் கொடுமை; தண்ணீர் பஞ்சம் ஏற்படும் ஆபத்து

யாழ்ப்பாணம்,செப்.1

யாழ்ப்பாணக் குடாநாட்டை கடும் வெயில் வாட்டி வருகின்றது. வெகு விரைவில் தண்ணீர் பஞ்சம் ஏற்படும் என்ற வகையில் வரட்சி நிலவுகின்றது.

இதேவேளை, அயல் நாடான இந்தியாவில் பல மாநிலங்களில் கடும் மழையினால் ஆறுகள் பெருக்கெடுத்து வெள்ளம் பல நகரங்களில் அழிவுகளை ஏற்படுத்தியிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

ஆந்திரா, கர்நாடகா, ஒரிசா முதலாய மாநிலங்களில் பெருவெள்ளம் ஏற்பட்டிருப்பதாக செய்திகள் கூறுகின்றன.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் கடந்த வாரம் நல்ல மழை பெய்ததாக தெரிகின்றது. தென்னிலங்கையிலும் மழைவீழ்ச்சி போதிய அளவு இருந்துள்ளது. ஆக, யாழ்ப்பாண மாவட்டம் மட்டுமே பெரும் வரட்சியை எதிர் நோக்கி வருகின்றது. (ப)

# தொண்டு நிறுவனங்களின் வாகனங்களை படையினரிடம் ஒப்படைக்குமாறு பணிப்பு

யாழ்ப்பாணம்,செப்.1

யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேறும் அரச சார்பற்ற நிறுவனங்கள் அங்குள்ள தமது வாகனங்கள் உட்பட எடுத்துச் செல்லமுடியாத சகல சொத்துக்களையும் இராணுவத்தினரிடம் ஒப்படைத்துவிட்டுச் செல்லவேண்டும் என்று பணிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவந்திருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் பணியாற்றி வந்த தொண்டுநிறுவனங்கள் இங்கு நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக தமது பணிகளை இடைநிறுத்திவிட்டு வெளியேறிவருகின்றன.

அவ்வாறு வெளியேறும் அரச சார்பற்ற நிறுவனங்களின் வாகனங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் புலிகளின் கைகளுக்குச் சென்றுவிடும் என்று படைத்தரப்புக் கருதுகிறது.

அதனைத் தடுப்பதற்காகவே இராணுவத்தினர் இந்தப் பணிப்புரையை விடுத்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, வடக்கு - கிழக்கில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் அனைத்தும் தம்மைப் பதிவுசெய்து கொள்ளவேண்டிய காலக்கெடு நேற்றுடன் முடிவடைந்தது.

வடக்கு - கிழக்கில் சில அரச சார்பற்ற நிறுவனங்கள் புலிகளுக்கு ஆதரவாக இயங்கிவருகின்றன என்று தகவல்கள் கிடைத்ததையடுத்து அரச சார்பற்ற நிறுவனங்களை ஒகஸ்ட் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்துகொள்ளும்படி அரசு அறிவித்திருந்ததாக அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார். (க)

# தேவையற்ற விடயங்களில் மூக்கை நுழைப்பதை நோர்வே கைவிடவேண்டும்

## அமைச்சரவைப் பேச்சாளர் யாப்பா சாடுகிறார்

கொழும்பு, செப்.1

இந்திய அரசுக்கு பிரிட்டன் மூலம் அழுத்தம் கொடுக்கவே ஜனாதிபதி அவசரமாக லண்டன் சென்றுள்ளார் என்று நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹான்ஸன் போவர் தெரிவித்த கருத்தில் எதுவித உண்மையும் இல்லை. ஜனாதிபதி தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டே பிரிட்டனுக்குச் சென்றுள்ளார்.

- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாட்டில் அவர் தொடர்ந்து தகவல் தருகையில் கூறியதாவது:-

நோர்வே சமாதான அனுசரணையாளர்கள் இலங்கை விடயத்தில் தேவையற்றவகையில் மூக்கை நுழைக்கின்றனர்.

ஜனாதிபதியின் பிரிட்டன் விஜயம் குறித்து கருத்துத் தெரிவிப்பதற்கு ஜோன் ஹான்ஸன் போவருக்கு எதுவித உரிமையும் இல்லை. அவர் தமக்கு வழக்கப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்றுவதைவிட்டு தேவையற்ற விடயங்களில் தலையிட்டு ஆரூடம் கூறுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி பிரிட்டனுக்கூடாக இந்தியாவுக்கு அழுத்தம் கொடுக்கப் போவதாக தெரிவிக்கப்படும் கூற்று உண்மையற்றது. இது குறித்து அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களான எமக்கே எதுவும் தெரியாது - இப்படி அவர் தெரிவித்தார். (ஐ)

# வன்னி-கொழும்பு தபால் சேவை நேற்று வழமைக்குத் திரும்பியது

## ஓமந்தையூடாக தபால் பொதிகள் வந்தன

யாழ்ப்பாணம்,செ.1

கிளிநொச்சி மற்றும் முல்லைத் தீவுப் பகுதிக்கான நூற்றுப் பதினொரு தபால் பொதிகள் ஓமந்தை ஊடாக நேற்று எடுத்துவரப்பட்டுள்ளன.

வட பிராந்திய பிரதித் தபால் மா அதிபர் எஸ்.குமரகுரு இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

கடந்த 11ஆம் திகதி தொடக்கம் தடைப்பட்டிருந்த வன்னிக்கும் - கொழும்புக்குமான தபால் சேவை நேற்று சீராக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் இந்தச் சேவை இடம் பெறுமென அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து அடுத்துவரும் கப்பல் மூலம் அல்லது ஏ-9 பாதை திறக்கப்படும் பட்சத்திலேயே யாழ்ப்பாணம் - கொழும்பு தபால் சேவை நடத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

குடாநாட்டில் சகல தபாலகங்களும் உப தபாலகங்களும் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 2 மணிவரையும் திறந்திருக்கும்.

அந்த வேளையில் மக்கள் தமது சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற தகவலையும் அவர் வெளியிட்டார். (அ-1)

## சுழிபுரத்தில் தேடுதல்

சங்கானை, செப்.1

வலிகாமம் மேற்கில் சுழிபுரம் பகுதியில் நேற்று படையினர் பாரிய தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

அந்தப் பகுதியை சுற்றிவளைத்த படையினர் சகலரையும் விக்ரோரியாக் கல்லுரிக்கு வருமாறு பணித்தனர் என்றும் அவர்கள் முகாமுக்கு முன் நிறுத்தப்பட்டனர் என்றும் - சிலரைப் படையினர் கைதுசெய்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (1-29)

# வடமராட்சி, தென்மராட்சிப் பகுதியில் நேற்றும் பாடசாலைகள் இயங்கவில்லை

யாழ்ப்பாணம்,செப்.1

குடாநாட்டில் வடமராட்சி மற்றும் தென்மராட்சி தவிர்ந்த ஏனைய பகுதிகளில் பாடசாலைகள் நேற்று இயங்கின.

ஊரடங்கு நீக்கப்பட்ட பின்னர் நகரப் பாடசாலைகளிலும் வலிகாமம் பாடசாலைகளிலும் மாணவர் வரவு ஓரளவு இருந்தன. கல்விச் செயற்பாடுகள் இடம்பெற்றன.

எனினும், வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் பாடசாலைகளுக்கு மாணவர் அறவே வரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

பாடசாலை பஸ்சேவைகளும் ஓரளவு இடம்பெற்றது. (1-173-203)

# எம்.ஜி.ஆரின் சிலை உடைப்பு நடிகர் சத்தியராஜ் கண்டனம்

யாழ்ப்பாணத்தில் அமரர் எம்.ஜி.இராமச்சந்திரனின் சிலைகள் உடைக்கப்பட்டமைக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார் தென்னிந்திய நடிகர் சத்தியராஜ்.

இது தொடர்பாக அவர் தெரிவித்திருப்பதவாது:-

இலங்கையில் எம்.ஜி.ஆர் சிலை உடைக்கப்பட்டதற்கு எனது கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இலங்கைத் தமிழர்கள் மீது பற்றும், பாசமும் கொண்டிருந்தவர் எம்.ஜி.ஆர். அவர் நடித்த எங்க வீட்டுப் பிள்ளை படம் திரைக்கு வந்த போது, அவரை இலங்கைக்கு வரவழைத்து, உற்சாக வரவேற்பு கொடுத்தது இலங்கை அரசாங்கம். மிகப்பெரிய வள்ளலாக வாழ்ந்து காட்டிய, அவர் மனிதாபிமானம் மிகுந்தவர். அவர் சிலை உடைக்கப்பட்டதை வன்மையாகக் கண்டிக்கிறேன் - என்றார் சத்தியராஜ். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செம்மணி மனிதப் புதைகுழி வழக்கு:

# மரபணு, பிரேத பரிசோதனை அறிக்கை சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கப் பணிப்பு

கொழும்பு, செப். 01

யாழ்ப்பாணம் செம்மணியில் மனிதப் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட எட்டு எலும்புக்கூடுகள் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான் குசல சரோஜினி வீரவர்த்தன முன்னிலையில் இடம்பெற்றது.

இந்த எலும்புக்கூடுகள் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப் பட்ட படையினர் மன்றில் ஆஜராகி இருந்தனர்.

எலும்புக்கூடுகள் தொடர்பான பிரேத பரிசோதனை அறிக்கையை உடனடியாக சட்டமா அதிபருக்கு அனுப்பிவைக்குமாறு நீதிவான் குற்றப்புலனாய்வுப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

எலும்புக்கூடுகள் மற்றும் மனித எச்சங்கள் தொடர்பான மரபணுப் பரிசோதனை அறிக்கையையும் உடனடியாக சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கும்படி நீதிவான் குற்றப்புலனாய்வுப் பொலிஸாரைப் பணித்தார்.

வழக்கு விசாரணை நவம்பர் 30ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டது.

(ஐ)

## குடாநாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்தால் மட்டுமே அனைத்து மக்களின் உணவுத் தேவையையும் பூர்த்தி செய்ய முடியும்.

யாழ். மக்கள் எதிர்நோக்கியுள்ள பட்டினிச் சாவை தவிர்க்கும் முகமாக ஏ-9 பாதை திறக்கப்படும் வரை கப்பலில் உணவுப் பொருள்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வழித்துணையுடன் கொண்டுவர மனிதாபிமான ரீதியில் உடனடியாக இணங்கும் படி அரசையும் - விடுதலைப் புலிகளையும் மிக பணிவுடன் வேண்டுகிறோம்.

ஏ-9 பாதை திடீரென மூடப்பட்டதால் யாழ்ப்பாணத்தில் அகப்பட்டு பரிதவிக்கும் மூவாயிரத்துக்கும் அதிகமான மக்களின் இடர் தீர்க்கும் வகையில் ஏ-9 பாதை திறக்கும் வரை மக்கள் போக்குவரத்திற்கான கப்பல் சேவையை உடன் ஒழுங்கு செய்யும் படியும் அரசையும் விடுதலைப் புலிகளையும் வேண்டிநிற்கிறோம் - என்றுள்ளது.

## மின்சார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய மின்கட்டண அதிகரிப்பின் பிரகாரம் முதல் 30 அலகுகளுக்கான கட்டணத்தில் மாற்றம் இருக்காது.

30 முதல் 90 வரையான அலகுகளின் கட்டணம் ஒரு ரூபாவாலும் 90 இற்கும் அதிகமான அலகளின் கட்டணம் ஒரு ரூபா ஐம்பது சதத்தாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன. (அ-1)

## இலங்கையில் தனது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று குற்றச்சாட்டை மறுத்த அரச அதிகாரிகள், கொஞ்சம் கோபமாகத் தெரிவித்தனர்.

"எமது சக ஊழியர்கள் 17 பேர் மூதூரில் வைத்து மரண தண்டனையை நிறைவேற்றுவது போல சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இந்தப் படுகொலைகளின் பின்னணியில் இருந்தவர்கள் இனங்காணப்பட்டு கொலைகளுக்குப் பொறுப்பானவர்களாக்கப்பட வேண்டும். அதுவரை இலங்கையில் எமது நிவாரணப் பணிகளைத் தொடர்ந்து முன்னெடுக்க முடியாது." - என்று ஐ.நா.வின் அவசர நிவாரணப் பணிகளின் இணைப்பாளரான ஜான் ஏகிலன்ட் நியூயோர்க்கில் வைத்து ஊடகவியலாளரிடம் கூறியுள்ளார்.

இந்தப் படுகொலைச் சம்பவங்கள் பற்றி எமக்கு சுயேச்சையான தகவல் எதுவும் ஐ.நா. அலுவலகத்துக்குக் கிடைக்கவில்லை என்றும் அவர் கூறியிருக்கிறார்.

### எல்லோரும் தமிழர்கள்

சுட்டுக் கொல்லப்பட்ட 17 ஊழியர்களும் தமிழர்கள். 'அக்ஷன் ஃபாயிம்' என்ற பிரெஞ்சுத் தொண்டு நிறவனத்திலேயே இவர்கள் வேலை பார்த்து வந்தவர்களாவர்.

### இரண்டாவது பெரிய சம்பவம்

பாக்தாத்திலுள்ள ஐ.நா.வின் அலுவலக வளாகத்தில் 2003 ஆம் ஆண்டு நடந்த குண்டு வெடிப்பில், பெரும் எண்ணிக்கையான நிவாரணப் பணயாளர்கள் பலியான சம்பவத்தையடுத்து நடந்த இரண்டாவது பெரிய நிவாரணப் பணியாளர் கொலைச் சம்பவம் மூதூரில் நடந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

### அரச அதிகாரிகள் தடை

2002 ஆம் வருடம் முதல் யுத்த நிறுத்த உடன்படிக்கையைக் கண்காணித்து வரும் நோர்ட்டிக் கண்காணிப்புக் குழுவினர் இந்தப் படுகொலை நடந்த விபரம் அறிந்து விசாரிக்க முற்பட்டிருக்கிறார்கள். ஆனால், இலங்கை அதிகார பீடமோ அதனைத் தடுத்து நிறுத்தி விட்டது என்று தெரிவித்திருக்கின்றனர்.

பாதுகாப்புப் படையினரைத் தவிர வேறு ஆயுதக் குழுக்கள் எதுவும் இந்தப் படுகொலையின் பின்னணியில் இல்லை என்பதைத் தாங்கள் நம்பகமான முறையில் உறுதி செய்து கொண்டதாகவும் கண்காணிப்புக் குழுவினர் கூறியுள்ளனர்.

### சர்வதேசக் கமிஷன் விசாரணை தேவை

"இந்தச் சம்பவத்தில் அரசும் சம்பந்தப்பட்டிருக்கிறது. எனவே, இந்தப் படுகொலைகள் பற்றி அரசு நடத்தும் விசாரணைகள் மீது நம்பிக்கை வைப்பது என்னைப் பொறுத்த மட்டில் சிரமமான காரியமாகும்.

"இது இலங்கைப் பிரச்சினை மட்டுமல்ல. இது அகில உலகம் சம்பந்தப்பட்ட பிரச்சினை. நிவாரணப் பணியாளர்களைக் கொன்று விட்டுத் தண்டனை பெறாமல் தப்பிவிட முடியாது. எனவே, இது அகில உலகப் பிரச்சினையாகியிருக்கிறது.

இந்தக் கொலைச் சம்பவங்களைச் சர்வதேச கமிஷன் ஒன்று தலையிட்டு விசாரிக்க வேண்டும். அதற்கு ஜனநாயகத்தின் காவலனும் பொறுப்புக் கூற வேண்டியதுமான அரசு ஆதரவு தரவேண்டும்" என்று யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவரான மேஜர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்ஸன் கூறியிருக்கிறார்.

இவர் இன்றுடன் இந்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் பதவியிலிருந்து விலகிறார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### உத்தரவாதம்

தொண்டு நிறுவனங்களின் நிவாரணப் பணியாளர்களின் பாதுகாப்புக்கு இலங்கை அரசு உத்தரவாதம் தர வேண்டும் என்று முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டனின் ஆழிப்பேரலை மீட்புப் பணிகளுக்கான ஐ.நாவின் பிரதித் தூதுவரான எரிக் சுவாட்ஸ் கூறுகிறார். இவர் அடிக்கடி இலங்கை வந்து செல்பவராவார்.

லண்டன் சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வட அயர்லாந்துப் பிரச்சினை, சமாதான உடன்பாடு தொடர்பாகப் பிரிட்டிஷ் பிரதமருடன் பேசவிருப்பது நல்லதுதான். ஆனாலும், இந்தப் பேச்சின் பயனாகத் திருப்பம் ஏதும் வரும் என்று நான் நினைக்கவில்லை என்று இங்குள்ள மேலை நாட்டு ராஜதந்திரி ஒருவர், ஜனாதிபதியின் லண்டன் விஜயம் தொடர்பாகக் கேட்டபொழுது கூறியிருக்கிறார்.

## கிளினிக்குகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.1

யாழ். போதனா வைத்தியசாலை யில் சிகிச்சை நிலையங்கள் (கிளினிக்குகள்) தற்போது ஊரடங்குச் சட்டம் தளர்த் தப்படும் நேரங்களில் நடைபெறுகின்றன என வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட நோயாளர்கள் குறிப்பிட்ட திகதிகளில் தமது கிளினிக்குக்குச் சமுகமளித்துச் சிகிச்சை பெறமுடியும் என் றும் பணிப்பாளர் தெரிவித்தார். (1-202)

## ஹொரவப்பொத்தானையில் 7 தமிழர்கள் கைது

வவுனியா, செப் 01

வவுனியா - ஹொரவப்பொத்தானை வீதியில் நேற்று முன்தினம் தமிழ் இளைஞர்கள் 7 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் விசாரணைகளின் பின்னர் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார். ஏனைய 6 பேரும் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் ஊர்காவற்படையைச் சேர்ந்த பெண் ஒருவர் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகிக் கொல்லப்பட்டதையடுத்து நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## கண்காணிப்புக் குழுவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கெப்பிட்டிக்கொல்லாவ சம்பவத்தில் பொதுமக்கள் கொல்லப்பட்ட உடனேயே தமிழீழ விடுதலைப் புலிகளின் பாணி தெரிகிறது என்ற ஊடகங்களின் பரவலான கதையை வைத்துத்தான் கண்காணிப்புக் குழு இம் முடிவை மேற்கொண்டுள்ளது.

இராணுவத்தினரின் அராஜகத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்கள் தன்னிச்சையாகவே இப்படியான வேலைகளைச் செய்யமுடியும். இங்கே வெடிபொருள் அறிவு என்பது அணு ஆயுத இரகசியம் இல்லை. ஸ்ரீலங்கா இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுவினரிடம் பணம் கொடுத்தால் எவ்வளவு வேண்டுமானாலும் வெடிபொருள்களை அவர்கள் தருவார்கள்.

ஆதாரமில்லாமல் ஒரு இயக்கத்தின் மீது பிழைபோடுவது நல்லதல்ல.

எங்களுடைய பதில் நடவடிக்கைகள் அனைத்துமே ஸ்ரீலங்கா இராணுவத்துக்கு எதிரானவையாகத்தான் இருக்கும். பொது மக்களுக்கு எதிரானதாக இருக்காது. அந்தக் குற்றச்சாட்டை நாம் மறுக்கிறோம்.

சம்பூர் நிலைமைகளைப் பொறுத்தவரையில் எங்களது எல்லைக்களுக்குள் ஊடுருவ முயன்ற இராணுவத்தினர் அந்த முயற்சிகளைக் கைவிட்டுவிட்டுத் தங்கள் நிலைகளிலேயே நிற்கின்றனர்.

மாவிலாறு சமர் தொடக்கம் சம்பூர் வரையிலான புலிகள் மீதான இழப்புகள் என்று ஸ்ரீலங்கா இராணுவம் தெரிவித்திருக்கும் கணக்கைக் கூட்டிப்பார்த்தால் அது ஆயிரக் கணக்கில் வரும். இது எல்லாம் சாத்தியமானதும் அல்ல; நம்பக்கூடியதும் அல்ல.

ஸ்ரீலங்கா இராணுவத்தினரது மன உறுதியைத் தக்கவைத்துக்கொள்ளவும், சிங்கள மக்களிடத்திலே தங்களை நியாயப்படுத்திக் கொள்ளவுமே இப்படியாகக் கூறிவருகின்றனர்.

சம்பூரில் ஏற்பட்ட மோதலில் எமது 18 போராளிகள் வீரச்சாவைத் தழுவியுள்ளனர். 22 பேர் காயமடைந்துள்ளனர் - என்றார் இளந்திரையன்.

## பெற்றோல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எரிபொருள் நிலையங்களில் பெற்றோலின் விலை 98 ரூபாவிலிருந்து 105 ரூபாவாகவும், டீசலின் விலை 64 ரூபாவிலிருந்து 71 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

இந்த அதிகரிப்பைத் தொடர்ந்து பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் பெற்றோல், டீசலின் விலைகளை 5 ரூபாவால் அதிகரிக்கத் திட்டமிட்டிருக்கிறது என்று போக்குவரத்து மற்றும் எரிபொருள் வளத்துறை அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி தெரிவித்தார்.

இதன்படி இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கீழ் இயங்கும் எரிபொருள் நிலையங்களில் பெற்றோலின் விலை 96 ரூபாவிலிருந்து 101 ரூபாவாகவும், டீசலின் விலை 64 ரூபாவிலிருந்து 69 ரூபாவாகவும் அதிகரிக்கப்படவிருக்கிறது.

மேலும், இதுவரை 45 ரூபா 50 சதமாக விற்பனை செய்யப்பட்ட ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 71 ரூபாவாக அதிகரிக்கப்படவிருக்கிறது என்றும் கூறப்படுகிறது.

(த)

## நெல்லியடியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

ஜெயதாஸ (வயது 21) என்ற இராணுவச் சிப்பாய் காயமடைந்தவராவார். இந்தச் சிப்பாய் உடனடியாக மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு சிகிச்சையளிக்கப்பட்டதன் பின்னர் பலாலி இராணுவ மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப் பட்டார்.

சம்பவத்தையடுத்து அப்பகுதியில் தேடுதல் நடத்திய படையினர் அங்கு வெடிப்பதற்குத் தயாரான நிலையில் வைக்கப்பட்டிருந்த மற்றொரு கிளைமோர் குண்டு ஒன்றையும் கிரனேற்றுக்களையும் மீட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் நடைபெற்ற பின்னர் நெல்லியடி மற்றும் அதனை அண்டிய பகுதிகள் போக்குவரத்துகள் தடுக்கப்பட்டன.

(க-70-15-78-173)

## இருபாலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் சுட்டுக்கொல்லப்பட்டார் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை நடத்தினார்.

சடலம் அடையாளம் காணப்படவில்லை.

சடலத்தை யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்புமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

## பிரதமர் பிளேயர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உலக விடயங்கள் குறித்தும், இரு தலைவர்களும் உரையாடினர்.

இந்தச் சந்திப்புத்தொடர்பாக லண்டனில் உள்ள இலங்கைத்தூதரகம் கருத்துத் தெரிவிக்க மறுத்துவிட்டது. எனினும் இலங்கையில் யுத்தநிறுத்தம் தடம்புரண்டிருப்பது குறித்தும் ஜனாதிபதி ராஜபக்ஷ பிரிட்டிஷ் பிரதமருடன் கலந்துரையாடினார் என்று கொழும்பில் அரசு அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் மஹிந்த ராஜபக்ஷ பிரிட்டிஷ் தலைவர்களைச் சந்திப்பது இதுவே முதல் தடவையாகும்.(ஐ)

## மஹிந்தவின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் உட்பட - இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

லண்டன் நேரப்படி நேற்று முற்பகல் 11 மணிமுதல் இரவு 7 மணிவரை இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

அரசாங்கத்தின் இனப்படுகொலையைக் கண்டிக்கும் பதாகைகளை ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றோர் தாங்கியிருந்தனர்.

ஐரோப்பிய தமிழ்க்கூட்டமைப்பினர் சார்பில் இந்த ஆர்ப்பாட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

ஈழத் தமிழர் படுகொலையை முடிவுக்குக் கொண்டுவந்து தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கக்கோரி இந்த ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

ஈழத் தமிழர்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி அதற்கு ஆதரவாக பல்லாயிரக் கணக்கில் பெறப்பட்ட கையெழுத்துக்கள் அடங்கிய மனுவும் இங்கிலாந்து பிரதமர் ரொனி பிளேயருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

COLLEGE OF ENGLISH

அனைத்துப்பிரிவு மாணவர்களும் புதிய நேர அட்டவணையினை 02.09.2006இல் பெற்று அன்றே வகுப்பில் சமுகமளிக்கவும்.

எமது கல்வி நிறுவன சமூகத்தினர் அனைவரும் நாளை 02.09.2006 (சனிக்கிழமை) ஊரடங்கு தளர்த்தப்பட்டு ஒரு மணித்தியாலத்தின் பின்னர் நிறுவனத்திற்குச் சமுகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தினமும் இந்நேர இடைவெளியில் அலுவலகம் திறந்திருக்கும்.

- அதிபர்.

(ச/50936)

The Express Institute

Irupalai, Kopay.

NEW SCIENCE CENTRE

யாழ்.நகர்

A/L 2007 & 2008

ஆரம்பம் : 02.09 சனி 8.30

DAY CLASS

ஆரம்பம் : 04.09.2006

PHY. - Mon. - Fri. 8.30-10.00

by : பிரபா

CHE. - Mon. - Fri. 10.00-11.30

by : அன்பழகன்

Maths :- 11.30-1.00

by : சிவகரன்

ஸ்ரீருட்டிய நவீன CAR வாடகைக்கு

★ திருமணம் (அலங்காரத்துடன்)

★ சுற்றுலா ★ விசேட வைபவங்கள்

போன்ற அனைத்து தேவைகளுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீன கார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக்கொள்ளலாம். (48465) (24)



தொடர்புகளுக்கு: [illegible]

T.P.: 0777-903090

0777 246117

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிடெட்டினால் ... வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.09.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org